செ.வெ.எண்: 56 நாள்:25.10.2021

**நாகப்பட்டினம் மாவட்டம் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த சேவை மையத்தின் நிரந்தரக் கட்டிடம் (one stop center) மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனை வளாகத்தில் ரூ.48 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இன்று (25.10.2021) காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த சேவை மையத்தின் மூலம் (OSC) பெண்களுக்கு மருத்துவ உதவி, சட்ட உதவி, காவல் உதவி, உளவியல் மற்றும் சமூக ஆலோசனை வசதி, மீட்பு மற்றும் தங்குமிடம் வசதி ஆகியன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேரமும் கட்டணமில்லா இலவச சேவை உதவி எண் 181 நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி oscnagapattinam@gmail.com என்பதை தொடர்பு கொள்ளலாம். 18 வயதிற்கு மேற்பட்ட வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். 18 வயதிற்கு கீழ் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மாவட்ட சைல்டு லைன் 1098 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம். வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் அனைத்து வயது சிறுமிகள் மற்றும் 8 வயது வரை உள்ள சிறுவர்கள் 5 நாட்கள் வரை ஒருங்கிணைந்த சேவை மையத்தில் தங்குவதற்காக தற்காலிக தங்கும் வசதி அளிக்கப்படுகிறது. மேலும், நீண்ட காலம் தங்கும் இடத்திற்கு ஸ்வதார் இல்லம் குறுகிய கால தங்கும் இல்லங்களுக்கு பரிந்துறை செய்யப்படுகிறது.

இச்சேவை மையத்தை குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களாகவோ, நண்பர்கள் மூலமாகவோ, உறவினர் மூலமாகவோ அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ ஒருங்கிணைந்த சேவை மையம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம், நாகப்பட்டினம். தொலைபேசி எண்: 04365 – 247353, கைபேசி எண்: 9578573747, கைப்பேசி 9150057442, 9150057443 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.முகமது ஷா நவாஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.கு.ஜவஹர் இ.கா.ப., தமிழ்நாடு அரசு மாநில சிறுபாண்மை நல குழு உறுப்பினர் திரு.தமிம்அன்சாரி, மாவட்டச் செயலாளர் திரு.என்.கௌதமன், ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**